ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி



காட்டழகிய சிங்கர் மூலவர், ஸ்ரீரங்கம்

## தனியன்

வ்ருஷபே ஸ்வாதி நசஷத்ரே சதுர்த்தஸ்யாம் ஸுபேதிநே /
ஸந்த்யாகாலே நிஸாயுக்தே ஸ்தம்போத்பூதம் ந்ருகேஸரிம் //



காட்டழகிய சிங்கர் உற்சவர், ஸ்ரீரங்கம்
புகைப்படம் உதவி : ஸ்ரீமுரளி பட்டர், ஸ்ரீரங்கம்



தெள்ளிய சிங்கர், திருவல்லிக்கேணி

திருஅவதாரம் - வைகாசி மாசம்; ஸ்வாதி நட்சத்திரம்; சுக்ல பசஷ சதுர்த்தசி

ஸ்ரீமந் நாராயணன் ஸந்த்யாகாலத்தில் தன்னுடைய பக்தன் ப்ரஹ்லாதனைக் காப்பதற்க்காக ஒரு தூணிலிருந்து தோன்றி இரண்யனை வதம் செய்தார். வேற எந்த அவதாரத்திற்கும் இல்லாத ஏற்றம் என்ன வென்றால் தன் பக்தனின் உயிரைக் காப்பதற்காகவே ஒரு அவதாரம் எடுத்து அரக்கனைக் கொன்று, ப்ரஹ்லாதனக்கு அருள்பாலித்தார். மற்று ஒரு ஏற்றம் என்னவென்றால், பகவான் பகைவனான இரண்யனிடத்தில் சீற்றமும், தன் அன்பு பக்தனான ப்ரஹ்லாதனிடத்தில் அருளும் ஒரே சமயத்தில் காட்டிய அவதாரம் இந்த நரசிம்ம அவதாரமே.

<u>ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் - ஸ்ரீ நரசிம்மறைப்பற்றிய ஒரு ஸ்லோகம்</u>

யோகோ யோகவிதாம் நேதா ப்ரதாதபுருஷேஸ்வர:
நாரஸிம்ஹவபுஸ் ஸ்ரீமாந் கேஸவ: புருஷோத்தம:

<u>ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியை ஆழ்வார்கள் எவ்வாறு மங்களாசாசனம் செய்து உள்ளார்கள் என்பதை கீழே சில பாசுரங்களில் அனுபவிப்போம்.</u>

<u>பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி - 17ஆம் பாசுரம்</u>

அடியும் படிகட்பத் தோள் திசைமேல் செல்ல
முடியும் விசும் பளந்த தென்பர். வடியுகிரால்
ஈர்ந்தான் இரணியனதாகம். இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தான் உலகளந்த நான்று.

<u>பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி - 84ஆம் பாசுரம்</u>

வரங்கருதித்தன்னை வணங்காத வன்மை
உரங்கருதிமூர்க்கத்தவனை - நரங்கலந்த
சிங்கமாய்க்கீண்ட திருவனடியிணையே
அங்கண்மாஞாலத்து அமுது.

<u>பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி - 31ஆம் பாசுரம்</u>

இவையவன்கோயில் இரணியதாகம்
அவைசெய்தரியுருவமானான் - செவிதரியா
நாகத்தான் நால்வேதத்துள்ளான். நறவேற்றான்
பாசத்தான் பாற்கடலுளான்.

திருமழிசைப்பிரான் - நான்முகன் திருவந்தாதி - 18ஆம் பாசுரம்

மாறாயதானவனை வள்ளுகிரால். மார்விரரண்டு
கூறாகக் கீறியகோளரியை - வேறாக
ஏத்தியிருப்பாரை வெல்வுமே. மற்றவரைச்
சார்த்தியிருப்பார் தவம்.

நம்மாழ்வார்

2ஆம் பத்து - 4ஆம் திருவாய்மொழி - 1ஆம் பாசுரம்

ஆடியாடி அகம்கரைந்து. இசை
பாடிப்பாடிக் கண்ணீர்மல்கி - எங்கும்
நாடிநாடி நரசிங்கா! என்று
வாடிவாடும் இவ்வாணுதலே.

9ஆம் பத்து - 3ஆம் திருவாய்மொழி - 7ஆம் பாசுரம்

ஆகம்சேர் நரசிங்கமதாகி. ஓர்
ஆகம்வள்ளுகிரால் பிளந்தானுறை
மாகவைகுந்தம் காண்பதற்கு. என்மனம்
ஏகம்எண்ணும் இராப்பகலின்யே.

பெரியாழ்வார்

திருபல்லாண்டு - 6ஆம் பாசுரம்

எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி
வந்துவழிவழிஆட்செய்கின்றோம். திருவோணத் திருவிழவில்
அந்தியம்போபதிலரியுருவாகி அரியையழித்தவனை
பந்தனைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே.

நான்காம்பத்து - முதல்திருமொழி - 1ஆம் பாசுரம்.

கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீள்முடியன்
எதிரில் பெருமை இராமனை இருக்குமிடம் நாடுதிரேல்
அதிரும் கழற்பொருதோள்இரணியனாகம் பிளந்து அரியாய்
உதிரமளைந்தகையோடிருந்தானை உள்ளவாகண்டாருளர்

## திருமங்கையாழ்வார் - பெரியதிருமொழி

### 1ஆம் பத்து – 7ஆம் திருமொழி – 1ஆம் பாசுரம் - சிங்கவேள்குன்றம்

அங்கண்ஞாலம்அஞ்ச அங்குஓராளரியாய். அவுணன்
பொங்கஆகம்வள்ளுகிரால் போழ்ந்தபுனிதனிடம்
பைங்கணானைக்கொம்புகொண்டு பத்திமையால். அடிக்கீழ்ச்
செங்கணாளிஇட்டிறைஞ்சும் சிங்கவேள்குன்றமே.

### 2ஆம் பத்து – 3ஆம் திருமொழி – 8ஆம் பாசுரம் - திருவல்லிக்கேணி

பள்ளியிலோதிவந்ததன் சிறுவன் வாயில்ஓராயிரநாமம்
ஒள்ளியவாகிப்போதஆங்கு அதனுக்கு ஒன்றுமோர்பொறுப்பிலனாகி
பிள்ளையைச்சீறிவெகுண்டுதூண்புடைப்பப் பிறையெயிற்றனல்விழிபேழ்வாய்
தெள்ளியசிங்கமாகியதேவைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே.

### 3ஆம் பத்து – 9ஆம் திருமொழி – 2ஆம் பாசுரம் - வைகுந்தவிண்ணகரம்

திண்ணியதோரரியுருவாய்த்திசையனைத்தும்நடுங்கத்
தேவரொடு தானவர்கள்திசைப்ப. இரணியனை
நண்ணி அவன்மார்வகலத்துஉகிர்மடுத்தநாதன்
நாள்தோறும் மகிழ்ந்து இனிதுமருவியுறைகோயில்
எண்ணில்மிகுபெருஞ்செல்வத்துஎழில்விளங்குமறையும்
ஏழிசையும் கேள்விகளும் இயன்ற பெருங்குணத்தோர்
மண்ணில்மிகுமறையவர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே.

### 5ஆம் பத்து – 6ஆம் திருமொழி – 4ஆம் பாசுரம் - திருவரங்கம்

வளர்ந்தவனைத்தடங்கடலுள் வலியுருவில்திரிசகடம்
தளர்ந்ததிரஉதைத்தவனைத் தரியாது அன்றுஇரணியனைப்
பிளந்தவனை. பெருநிலம்ஈரடிநீட்டிப் பண்டுஒருநாள்
அளந்தவனை. யான்கண்டது அணிநீர்த்தென்னரங்கத்தே.

### சிறியதிருமடல் - 44ஆம் கண்ணி

குடல்மாலை சீரார்திருமார்பின்மேல்கட்டி. செங்குருதி
சோராக்கிடந்தானைக் குங்குமத்தோள்கொட்டி
ஆராவெழுந்தான் அரியுருவாய்.

**ஸ்ரீலஷ்மி சமேத ஸ்ரீநரசிம்மர் திருவடிகளே சரணம்.**

வாசிக தோஷ: சஷந்தவ்ய: